உ

சிவமயம்



யாழ் அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும்,

கொழும்பை வாழ்விடமாகவும் கொண்ட

# அமரர் திருமதி ஜெமா ராஜ்மோகன் அவர்களின்

சிவபதமடைந்தமை குறித்த

## நினைவு மலர்

19.09.2015

# அமரர் திருமதி ஜெமா ராஜ்மோகன் அவர்கள்



**தோற்றம்**
27. 09. 1979

**மறைவு**
20. 08. 2015

## திதி வெண்பா

ஆண்டு மன்மத அமைந்த ஆவணித்திங்கள்
பூண்ட ஷஷ்டித் திதியதனில் - மாண்பு
ராஜ்மோகன் பத்தினியார் ஜெமா அம்மையார்
பூதவுடல் நீத்தார் காண்

உ
சிவமயம்



திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி

பாலும் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலுங் கலந்துனக்கு நான் தருவேன் - கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீயெனக்குச்
சங்கத் தமிழ்மூன்றும் தா.

வாக்குண்டாம் நல்ல மணமுண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனி நுடங்காது — பூக்கொண்டு
துப்பார் திருமேனித் தும்பிக்கை யான்பாதம்
தப்பாமற் சார்பார் தமக்கு.

ஒர்கொம்மா ஏரம்பா உன்னையன்றி யன்னியர்பால்
வாரஞ் செயும்பரிசு மற்றறியேன் - தேருநெறிக்
கல்விப் பொருளோடு காட்டுசெல் வப்பொருளும்
நல்கித் தனியெணையாள் நன்கு.

செல்வமொடு கல்விதரும் சித்திதரும் முத்திதரும்
அல்லல் பிணிவறுமை ஆதியெலாம் - ஒல்லையினில்
நீக்குங் கணபதியே நீயருள்வா யென்றுரைக்கும்
வாக்குடையார் தங்களுக்கு மற்று

திருவும் கல்வியும் சீரும் தழைக்கவும்
கருணை பூக்கவும் தீமையைக் காய்க்கவும்
பருவமாய் நமது உள்ளம் பழுக்கவும்
பெருகும் ஆழத்துப் பிள்ளையைப் பேணுவாம்

திருச்சிற்றம்பலம்

## தேவாரம்

எண்ணுகேன் என் சொல்லி எண்ணுகேனோ
எம்பெருமான் திருவடியே எண்ணின் அல்லால்
கண்ணிலேன் மற்றோர் களைக ண்ணில்லேன்
கழலடியே கைதொழுது காணினல்லால்
ஒண்ணுள்ளே ஒன்பது வாசல் வைத்தாய்
ஒக்க அடைக்கும்போ துணரமாட்டேன்
புண்ணியா உன்னடிக்கே போதுகின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணியனே

## திருவாசகம்

முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி அறிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணம்
சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனையாண்ட
அத்தனெனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே! உலப்பிலா ஒன்றே!
உணர்வு சூழ் கடந்ததோ ருணர்வே!
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே!
சித்தத்துள் தித்திக்கும் தேனே!
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே!
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே

## திருப்பல்லாண்டு

மன்னுக தில்லை! வளர்கநம்
பக்தர்கள் வஞ்சகர்போய் அகல
பொன்னின்செய் மண்டபத்துள்ளே புகுந்து
புவ னியெல்லாம் விளங்க
அன்னநடை மடவாள் உமைகோன்
அடியோ முக்கருள் புரிந்து
பின்னைப்பிறவி யறுக்க நெறிதந்த
பித்தற்குப் பல்லாண்டு கூறுதுமே

## திருப்புராணம்

உலகெ லாம் உணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்

## திருப்புகழ்

உம்பர்தருத் தேனுமணிக் கசிவாகி
ஒண்கடலிற் தேனமுதத் துணர்வூறி
இன்பரசத் தேபருகிப் பலகாலும்
என்றனுயிர்க் காதரவுற் றருவாயே
தம்பிதனக் காகவனத் தணைவோனே
தந்தைவாலத்தாலருள்கைக் கனியோனே
அன்பார்தமக் கானநிலைப் பெருளோனே
ஐந்துகரத் தானைமுகப் பெருமானே

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகம் எல்லாம்

திருச்சிற்றம்பலம்

# ஜெமாவின் வாழ்க்கை வரலாறு

கோப்பாய் சொந்த இடமாகவும், கண்டியை வாழ்ந்த இடமாகவும் கொண்ட நடராஜா மாஸ்டரின் இளைய மகனான குமாரராஜாவிற்கும், அச்சுவேலியைச் சேர்ந்த செல்லப்பா தம்பதியரின் மூத்த மகன் ஈஸ்வரிக்கும் கடைசி மகளாகப் பிறந்தவர், இன்று இறைவனடியில் சேரந்திருக்கும் ஜெமா.

இவருடன் கூடிப் பிறந்தவர்கள் இன்னும் நால்வர். மோகனராஜன், மோகனரூபன், உமா, ரமா இவர்கள் முறையே, ஜேர்மன், டென்மார்க், லண்டன் ஆகிய இடங்களில் வசித்து வருகிறார்கள்.

தகப்பனாரின் தொழில் சம்பந்தமாக இவர் கொழும்பிலே வாழ்ந்து படித்த காலத்தில் தகப்பனார் காலமானதும், இவரையும் இவரது தாயார் இவரது சகோதரியான ரமா குமார் குடும்பத்தாரிடம் லண்டனுக்கு அனுப்பி வைத்தார். அவர்களின் மேற்பார்வையில் வாழ்ந்த ஜெமா, படித்து ஒரு தொழிலும் செய்து வரும் காலத்தில் உரிய பருவம் வந்ததும் தகுந்த ஒரு வரனைத்தேடி எல்லோர் சம்மதத்துடனும் மணம் முடித்து வைத்தார்கள்.

ஜெமாவின் கணவரான மோகன், புன்னாலைக் கட்டுவனைச் சேர்ந்த திரு பசுபதிப்பிள்ளை (Sports Master) மகனாவார். இவர்களுக்கு ஓர் அருமைப் புதல்வனாக அஸ்வன் வந்துதித்தான். இன்று 12 வயதுப் பாலகனாக அம்மா என்று அழைக்கும் அரும்பேற்றை இழந்து நிற்பது கவலைக் கிடமானதாகும்.

இவரைப் பிடித்த இந்த கொடிய நோயைக் குணப்படுத்தி விடலாம் என எண்ணிய மோகன், இவரது கணவரும், சகோதரர்களும் இந்தியா, இலங்கை என்று பல தடவை

கொண்டு சென்று வைத்தியம் செய்தும் எதுவும் பலனளிக்கவில்லை. இந்தியா இலங்கையில் இருக்கும் போதெல்லாம் தனது நோயையும் பாராது சகோதரி ரமாவின் உதவியுடன் இவர் தரிசிக்காத தலங்கள் இல்லை. செய்யாத தான தர்மம் இல்லை. இளம் வயதிலேயே ஆன்மீகப் பணியில் பெரும் பங்கு கொண்டார். இத்தனைக்கும் இறுதிவரை ஜெமா மனத்துணிவும், தைரியமும், மனோபலமும் கொண்டு மகத்தான கடவுள் நம்பிக்கை கொண்டவராகவே இருந்தார்.

இத்தகைய நற்பண்புகள் கொண்ட ஜெமாவிற்கு ஏன் இப்படியான சோதனை என்ற யாரும் கேட்கலாம். சிந்திக்கலாம். விமர்சிக்கலாம் ஒன்றே என்ற உண்மை, அவரவர் செய் வாழ்வின் பயனை அனுபவித்துத்தான் தீர வேண்டும். இதுவே நியதி.

பிறப்புண்டேல் இறப்பும் உண்டு என்பதை எவரும் மாற்றிவிட முடியாது. அது எந்த ரூபத்திலும் எப்போ வரும் என்பது தான் புரியாத புதிர்.

இவரை மருமகளாக அடைந்த மோகன் பெற்றோரின் மச்சான்மாரின் அரவணைப்பும், சகோதர சகோதரிமாரின் மன நிறைவான வாழ்த்துக்களும், ஜெமா உயிருடன் இருக்கும்போது இருந்தது போல் இன்றும், என்றும் அவரின் ஆத்மசாந்திக்கு ஆதரவாக அழைந்து, ஜெமாவின் ஆத்மா இறைவன் பாதத்தில் ஊன்றி விட வழிவகுக்கும் என்பதில் ஐயமில்லை.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

## கணவன் புலம்பல்

மணம் முடித்த என் மனைவி ஜெமா
குணம் குன்றா என் மனைவி ஜெமா
பிணமாகக் கிடப்பதை பார்க்க உள்ளம் உதறுதம்மா

என் ஜெமாவின் ஆத்மா சாந்திக்காய்
அல்லும் பகலும் இறையருள் வேண்டி
கல்லும் கரைய காரிருள் சூழ்ந்திருக்க
செல்லும் வழி தெரியாது துடிதுடித்து நிற்கின்றேன்

எனக்கென ஓர் சொத்தை ஈந்துவிட்டு
உனக்கொர் தனியிடம் தேடிப்போனாயோ
மகனிற்கு நற்தந்தை நான் என்றோ
அம்மா என்று அழைக்க என்மகனை
அருகதையாக்கிவிட்டு தன்னந்தனியே
இறைவனடி சேர்ந்தாயோ

## தாயார் புலம்பல்

பிள்ளைகள் ஐவரென விரல் மடித்து எண்ணினேன்
மடித்த விரல் ஒன்றை ஒடித்துவிட்டான் இறைவன்
ஒடித்த இடம் வலிக்குதம்மா என் இதயம் கொதிக்குதம்மா
நான் படித்த பாடம் ஒன்றுதான் - இனி
பெருமைப்பட மாட்டேன்

பெற்ற பொழுதிலும் நான் இருந்தேன்
உன் அருகில் பெருமகிழ்ச்சி தானடைந்தேன்
இறக்கும் பொழுதில் நானிருந்தேன்
உன் அருகில் மறக்கமுடியா வேதனையில்
வெதும்பித் துடிக்கிறேன் இப்போ

முலை ஊட்டி வளர்த்த என் கண்மணியை
முந்தானை விரித்து உறங்க வைத்த என்கணிமணியை
தோளில் போட்டுத் தாலாட்டிய என் கண்மணியை
மரப்பெட்டியில் அடைத்துச் செய்யும்
மரணச்சடங்கை எப்படித்தான் நான் பார்ப்பேன்
பெற்ற வயிறு அனலாய்க் கொதிக்குதம்மா
பேதைமனம் பஞ்சாய் வெடித்துப் பறக்குதம்மா

## சகோதரிமார் புலம்பல்

ஜெமா ஜெமா என எந்நேரம் அழைத்தாலும்
ரமா ரமா என அன்பொழுகக் கதைத்திடுவாய்
உயிர்பிரியா நிலையில் என் அழைப்பை
ஏற்பதற்கு யார்தான் உளர் இங்கு

கொடிய நோயால் வருந்தினாலும்
படிவாய் பணிவாய் பக்குவமாய்க் கதைத்து – எம்
துயரெல்லாம் துடைத்தெறிவாய்
அத்தனையும் எண்ணும்போது
பித்தராய் பிதற்றுகிறோம் வேதனையில் உனை
ஏற்றுவிட நினைத்த இறைவன் எம் விளக்கை
அணைத்து விட்டார் போலும்

கண்மணியாய் காத்து வந்தேன் ஜெமாவை
விண்வெளிக்கே விரைந்து விட்டாள் - என
எண்ணிப் பார்க்க முடியாமல் எம் உள்ளம்
ஏங்கித் தவித்து எவ்விக் கொதிக்குதம்மா

## சகோதரர் புலம்பல்

சகோதரிமார் மூவரென மூழ்கினோம் மகிழ்ச்சியில்
மூவரில் ஒருவரை எடுத்துவிடடான் இறைவன்
பொய்யான வாழ்க்கை இது என புரிந்து விட்டோம்
மெய்யாக எம் தங்கை மோட்சமே போயிருப்பாள்

தங்கைமார் மூவரென தம்பட்டம் அடித்தோம்
மங்காமல் மறையாமல் ஒன்றை இழந்து விட்டோம்
தன் கையால் அவர்தரும் பரிசுகள்
எம்கையால் ஏந்தி ஏற்று நின்றோம் - இன்று
அவள் கைகள் செயலற்று ஒதுங்கிக் கிடக்க
எம் நெஞ்சம் கொதித்துப் பொங்குதம்மா
பாசத்தின் பிறப்பிடமாய்
நேசத்தின் நெருங்கிடமாய்
காலத்திற்கும் காலம் கண்டு கொள்ளும் எம் தங்கை
காலனிடம் போய்விட்ட
கோலத்தை காணும் சக்தி அற்று
தவியாய்த் தவிக்கின்றோம்

# உறவினர் அலறல்

## பெறாமக்கள்

அன்ரி என்று அழைக்கும் போது இந்த
அகிலமெலாம் உன் காட்சிதான் எமக்கு
தம்பியை மட்டும் எமக்குத் தந்துவிட்டு
தரணியை விட்டுப்போனதை
எண்ணும்போது அலறல்தான் மிச்சம்

## அன்ரிமார் (யாழ்ப்பாணம்)

என்னதான் கேட்டாலும் மனம் கோணாது
அள்ளிக் கொடுத்து அன்பாக வாய்மொழியும்
பண்புள்ளம் கொண்ட ஜமா உன் இழப்பை
ஏற்க முடியாமல் ஏங்கி நிற்கின்றோம்

## மாமா மாமி (யாழ்ப்பாணம்)

மாமா மாமி என்றால் அங்கே பாசத்தின்
குரல் ஒலி பிறக்கும்
இல்லை என்று சொல்லாமல் இங்கிதமாய்
பகிர்ந்தளித்தே வாழ்ந்த உன் வாழ்க்கை முறையை
இரைமீட்டுப் பார்க்கையில் இதயமே வெடித்து விடும்

ஜெமா அக்கா என்றால் போதும்
என்ன வேணும் என்றே கேட்டிடுவாய்
எம் தேவைகளை உடனடியாகப் பூர்த்தி செய்து
நன்னிலையில் ஏற்றிவிட்ட எம் தெய்வமே
உன்னை எப்படித்தான் மறந்து வாழ்வோம் இங்கு

எங்கே கண்டாலும் கட்டி இணைத்து அப்பா மாமி என்று
அன்பு மொழி பகிர்ந்துவிடுவாய். நோய் வாய்ப்பட்டு இருக்கும்
பொழுது வீட்டுக்கு வந்தாலும் அன்பான உபசரிப்பால்
தங்கிடுவாய்
இத்தகைய என் அன்பு மருமகள் எங்களை விட்டுப் பிரிந்தது
தாளாத கவலை என்றும் தீராத சோகம் பெரியமாமி
தள்ளுவண்டியில் இருக்கும் போதும் தயங்காத மனத்துடன்
மாமாவைப் பார்க்க என வந்தாயே.
இதை எப்படித்தான் மறக்க முடியும்

யாராக இருந்தாலும் கலகலபப்பாய் பேசி
நோயையும் பாராது கடைசி வரை பழகி
நண்பர்களாக்கி நல்லுறவு கொண்டு
இறக்கும் வரை இயங்கிவந்த அன்புச்
சினேகிதியே உன்னை மறக்கும் நாள்
கிடையாது மயங்கித் தவிக்கின்றோம்

அன்புள்ள **சோதி மாமி**

## மைத்துனர்மார் புலம்பல்

பெற்றெடுத்த பிள்ளை போல் எம் மைத்துனியை
பெரும்பேறாய் காத்து பார்த்து வந்தேன்
பருவம் வந்ததும் பண்பான வரம் தேடி
பலரறிய மணம் முடித்து உளம் குளிர்ந்தேன்
இப்போ உன்னைச் சடலமாய்ப் பார்க்க
எப்படித்தான் என் மனம் இசையும்
தாங்கொணாத்துயரத்தில் மூழ்கி
ஏங்கி இடி விழுந்து
புழுவாய்த் துடிக்கின்றேன்
கண்திறந்து வாய்மொழிய மாட்டாயா
உன் புகலிடத்தை

## மாமன் புலம்பல்

நல்லதொரு மருமகள் நாம் பெற்றோம் என
சொல்லிச் சொல்லி எமை வாழ வைத்த ஜெமா
சொல்லாமல் கொள்ளாமல்
எல்லோரையும் விட்டுப்பிரிந்த காரணம் தான்
யாம் அறியோம்

## மைத்துனிமார் புலம்பல்

ஒருவருக்கும் கிட்டாத அரும்பேற்றை
யாம் பெற்றொம் என திருப்தியுடன் நாம் வாழ்ந்தோம்
இடைவழியில் தட்டப் பறித்தே
தலைகுனிய வைத்து விட்டான் இறைவன்
மைத்துனியான் இழப்பால் ஆறாத்துயரில்
அமைதியற்று வாழ்கின்றோம் இங்கு

# அருமை அக்காவின் பிரலாபம்

எனது அருமைத் தங்கை ஜெமா ராஜமோகன் எனது அப்பா திரு குமாரராஜா, திருமதி ஈஸ்வரி குமாரராஜா அவர்கட்கு கடைசி மகளாக பிறந்தார். ஜெமா எங்களுடைய குடும்பத்தில் ஐந்தாவது மகளாக பிறந்திருந்தார். கெஞ்சினாலும் கிடைக்காது என்பார்கள் ஐந்தாவது பெண் குழந்தை. அத்துடன் அவர் கேட்டை நட்சத்திரம் உடையவர். மிக்க அதிஷ்டசாலி. எங்களுடைய குடும்பத்தில் அவர் ஒரு அஷ்டலக்குமி. இவர் பிறந்தபின்பு தான் நானும் என்னுடைய மற்றைய சகோதரர் சகோதரிகளும் அம்மா, அப்பாவும் செல்வாக்குடன் வாழ்ந்திருந்தோம். எங்களுடைய குடும்பத்தில் சகோதரர் சகோதரிகள் மோகன் உமா. நான் என் அன்புத் தம்பி ரூபன் இவர்களுடனும் மிகுந்த பற்றதலும் கொண்டிருந்தவர் ஜெமா.

ஜெமாவிற்கு ஒரு அருமையான மிகவும் புத்திக்கூர்மை நல்ல பண்புடைய சிறந்த திறமைசாலியும் உள்ள ஒரு ஆண்மகளும் உள்ளார். அவர் எனக்கு ஒரு சோதரி மட்டுமல்ல. ஒரு நல்ல நண்பியும் கூட. என்றும் நான் அவருடனே பக்கத்தில் இருக்க வேண்டும் என்று ஆசைப்படுவார். என்னுடைய பிள்ளைகள் நந்துஜா, சகானா அவர்களுடன் அவர் ஒரு சிறிய தாய் மாதிரி இருக்கவில்லை. அவர்களின் ஒரு உற்ற தோழி மாதிரித்தான் பழகுவார். அவர்களை அழகுபடுத்திப் பார்ப்பதில் மிகவும் ஆசைப்படுவார்.

நந்துஜாவின் திருமண விழா சிறப்பாக நடத்த வேண்டும் ஆர்வமும் அக்கறையும் கொண்டு எங்களுக்கு எல்லா உதவிகளையும் புரிந்து அவவும் தாய்க்கு தாயாக அவருடைய கணவர் ராஜ்மோகனும் அவருக்கு தந்தையாக திருமண விழாவை சிறப்பாக நடத்தி தந்தார்கள். அதை என் வாழ்வில் எப்பொழுதம் மறக்க இயலாது. எனது மருமகனான மாப்பிள்ளை பார்த்து அவரது நற்குணங்களை புரிந்து என் மகளுக்குத் திருமணம் செய்யுமாறு கேட்டுக் கொண்டார். ஜெமா, நந்துஜா

சகானாவும் சித்தியாருடன் நிறைய பாசமும் உயிரையும் வைத்திருந்தார்கள். அவர்களும் ஜெமாவின் உயிரைக் காப்பாற்ற நிறைய முயற்சிகள் எடுத்துக் கொண்டார்கள்.

அத்துடன் அவர்கள் தங்களின் வாழ்க்கையை ஜெமாவிற்காக அர்ப்பணித்தார்கள். ஏதாவது கொண்டாட்டமா யிருந்தாற் கூட சித்தி இல்லை அவரில்லாமல் எங்களுக்கு ஏது சந்தோஷம் இல்லை என்று மறுத்து விடுவார்கள். ஜெமா சகானா, நந்துஜாவைத் தூக்கி வளர்த்தவர். இதையெல்லாம் எழுதும்போது எனது நெஞ்சு வலிக்கின்றது. என்னுடைய பங்களிப்பும், எனது கணவர் குமாரின் பங்களிப்பும் நிறையவே நாங்கள் செய்து அவவின் உயிரைக் காப்பாற்ற நாங்கள் எடுக்காத முயற்சி கொஞ்சநஞ்சம் இல்லை. எனது சகோதரி உறக்கமில்லை. உணவு உண்ணமுடியாமல் இருக்கும் பொழுது பணம் என்ன பொருள் என்ன வீடு என்ன கார் என்ன பகவத்கீதையில் கிருஷ்ணர் கூறியது போல் எதை நாங்கள் கொண்டு வந்தோம். அதை இழப்பதற்கு. ஆகவே எல்லாவிதமாக முயற்சியும் எடுத்து என்னை அவவிற்கு ஆக நான் அர்ப்பணித்தேன்.

எப்பொழுதும் என்னை றமா அக்கா என்று வாய் நிறையக் கூப்பிடுவார். றமா அக்கா நீங்கள் பக்கத்தில் இருந்தால் எனக்கு ஒரு பெரிய பலம் என்று கூறுவார். அப்படியே நானும் அவவுடன் காலத்தை கொண்டு செலுத்தினேன். இன்றும் அல்ல என்றென்றும் என் உயிர் மூச்சு நினைவுகள் எல்லாம் அவவிற்கே தான். நான் மனிதர் உருவத்தில் வாழுகின்றேன். ஆனால் உடலின் பலமும் குறைந்து கொண்டே போகின்றன. என் நினைவுகளிலும் எப்பொழுதும் அவர் நிறைந்து இருப்பார். அம்மாவும் அவர் செல்ல மகளின் புலம்பலும் கண்ணீர் சிந்தலுடன் இருக்கின்றார்.

ஜெமா சிறந்த ஒரு குடும்பத்தலைவியாகவும் ஒரு பொறுமைசாலியாகவும் எல்லாத்துறையிலும் சிறந்து விளங்கி னார். அத்துடன் ஆங்கிலம் சிங்களம், தமிழ் திறம்படக் கற்று

மற்றவர்கட்கு உதவியாகவும், உதாரணமாகவும் வாழ்ந்து வந்தார். ஒன்றுமே தெரியாது என்ற சொல்லமாட்டார். எதுவும் செய்ய முடியும். செய்ய முடியாதது என்று ஒன்றுமில்லை என்று சொல்வார். எல்லோரையும் தன் இனிய பேச்சுக்களால் கவர்ந்து இழுப்பார். நிறையச் சினேகிதர் இருந்தாலும் அவருக்கு பிடித்த சினேகிதி சைலா என்பவர் மட்டும் தான்.

அவர் எல்லோரையும் அவருடன் நேசமும் வைத்து உதவிகள் புரிந்தவர். அவரும் குடும்பம் ஜெமாவை நினைத்து ஆளாத்துயரில் இருக்கின்றார்கள். திருமதி சைலா என்பவர் எனது தங்கைக்கு இந்தியாவில் வைத்தியம் செய்வதற்கு நிறைய ஏற்பாடுகள் செய்தார். இந்தியாவில் திருமதி லதா குடும்பம் அவவின் பெற்றோர்கள் சகோதரியும் சகோதரர்கள் மைத்துனி பிள்ளைகள் ஜெமாவின் மேல் நிறையப் பாசம் வைத்திருந்தார்கள். ஆனந்த் குடும்பம் அவர் ஒரு வசதியான குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பெருமை என்பதே இல்லை. ஜெமாவின் மேல் நிறைய மரியாதை வைத்திருந்தார்கள். அவர் பாசமும் அன்பும் அவர் குடும்பத்தார் செய்த உதவியும் மறுக்க முடியாது. இப்படியான மனிதர்கள் காண்பது மிகவும் அருமை. இறைவன் ஒரு அற்புதமான உறவுகளை ஏற்படுத்திக் கொடுத்திருந்தார்.

இலங்கையில் வைத்தியத்திற்காகச் சென்ற போது திரு ஜீவகேசன் குடும்பம் திரு கமலாதேவி குடும்பம் எங்கள் உறவினர்கள் இவர்கள். எங்கள் ஆசைமாமா திரு அருந்தவகுமார் குடும்பமும் ஜெயாவை அக்கறையோடு பார்த்துக் கொண்டார்கள். ஜெமாவும் ஜீவகேசனின் பெண் பிள்ளைகளின் அஸ்வினி மௌளி என்று வாய் நிறையக் கூப்பிடுவார். அவர்கள் மேல் மிகுந்த பாசத்தை வைத்திருந்தார். அஸ்வினி மௌளியும் ஜெமா அன்ரி பாவம் அவர்கள் தான் எங்களுக்கு வழிகாட்டியாக இருந்தவர்கள் என பிஞ்சுக் குழந்தை மனதில் ஜெமா இடம் பிடித்திருந்தார். எமது மச்சாள் கஜானி எனது மாமி செல்வி தாய்க்குத் தாயாக ஜெமாவை பார்த்துக்கொண்டார். ககானி கூறுவார் ஜெமா அன்ரி தான் எனக்கு உலகத்தை காட்டி

விட்டவர் என்று எல்லோரும் எல்லாம் கற்றுத் தெரிந்து நன்றாக வாழ வேண்டும் நினைப்பார்.

ஜெமா ஞானம் Telecom Manager பணி புரிந்தவரும், கொழும்பில் ஆங்கில தனியார் பாடசாலையில் திறம்படக் கற்றவருமாவார். Sainsbury எனும் Super Market இலும் பணிபுரிந்து சிற்றியில் Europa Food & Wine எனும் கடையில் வேலை செய்து அதன் பிறகு ஐரி படித்து பின்பு இந்தியாவில் அழகு நிலயத்தில் பணி புரியும் சான்றிதழ் எடுத்து இருந்தார். இத்தனை திறமைசாலியான என் தங்கையை கடவுள் வாழக் கொடுத்து வைக்கவில்லை. அவர் தன்னை அழகுபடுத்துவதில் ஆர்வம் கொண்டவர்.

கணவன் மேல் மிகவும் பாசமும் நேசமும் உடையவர். திரு ராஜ்மோகனும் ஜெமாவை கடைசி வரையிலும் கவனமாகப் பார்த்துக் கொண்டவர்.அதை எப்பொழுதும் மறுக்க முடியாது. எனது சகோதரி மற்றும் எல்லாச் சகோதர்களிடமும் அன்பு கொண்டவர். மிகவும் பொறுமைசாலி. எனது சகோதரி இல்லாத வாழ்க்கையை நினைத்துப் பார்க்க முடியவில்லை. ராஜ்மோகனின் சகோதரிமார் சகோதரர் அன்பாக நடந்து கொண்டார்கள். அவர்கள் ஒருமுறை என்னிடம் கூறி இருந்தார்கள். எங்களுக்கு ஜெமா கிடைத்தது ஒரு வரப்பிரசாதம். ஆனால் அவர்களுடன் சேர்ந்து வாழக் கொடுத்து வைக்கவில்லை என்றும் ஜெமாவின் மாமனார் திரு பசுபதிப்பிள்ளை மாஸ்டர் அவர்களும் ஜெமா மீது பாசம் வைத்திருந்தார்.

எனது பேத்தி அனையா நிருக்தி மேல் மிகவும் பாசம் வைத்து அவருக்கு பாட்டு பாடி தூங்க வைக்க முயற்சி எடுப்பார். ஆனால் நிருக்தி நாட்டியம் ஆடுவார். அதைப்பார்த்து அவர் சந்தோஷப்படுவார். அஸ்வனை என் கண்ணின் இமைபோல பார்த்து வளர்ப்பேன். என்னையும் ஆண்டவன் சுகதேகியாக வாழ வைக்க வேண்டும். என் பிள்ளைகள் என் கணவர் அஸ்வனின் மேல் பாசம் வைத்திருக்கிறார்கள். அஸ்வன் பிறந்த காலம் தொட்டு அவர் எங்களுடன் தான் இருந்து வருகிறார்.





என்னுடைய பிள்ளைதான் அவரும் அவர் எங்களை பெரியம்மா பெரியப்பா என்று வாய் நிறையக் கூப்பிடுவார். எனக்கு தெரிந்து ஒரு குறையும் என் தங்கைக்கு வைத்திருக்கவில்லை. என் கணவரும் அப்படித்தான். ஜெமாவைத் தன் மகள் ஸ்தானத்தில் வைத்துப் பார்த்தார். அவவும் உரிமையுடன் குமார் அண்ணா இது வேண்டும், அது வேண்டும் என்று உரிமையோடு கேட்பார். ஏன் எங்களுடன் அவர் சிறுவயதிலே இருந்தே வாழ்ந்து வந்தார்.

எனது மருமகனின் தாயார் ராசியா அவர்கள் எங்களுக்கு என் தங்கை ஜெமாவின் மேல் பாசம் வைத்து வைத்திருக்கிறார் திருமதி ராசியா எப்பொழுதும் சொல்லவார். ஜெமா என்னுடைய சகோதரி. அவருக்கு நிறைய உதவிகள் செய்து கொடுத்திருந்தார். அவர் தனது கையால் ஜெமாவிற்கு சாப்பாடு செய்து பரிமாறுவார். அவர் எப்பொழதும் சொல்லுவார். ஜெமாவி எங்களுடைய குடும்பம் என்றும் எப்பொழுதம் சுகத்தையும் விசாரித்து அவ உடல் நலம் சரியில்லை என்றால் உணவு செய்து தங்களுடைய ஆலயத்திற்கு வரும் மக்களுக்கு உணவு நிறைய செய்து கொடுப்பார்.

இப்படியான ஒரு தங்கையை நான் இழந்து விட்டேன். அவவின் மலரும் நினைவுடன் வாழ்ந்து கொண்டிருக்கும் அவவின் சகோதரி.

றமா.

# OBITUARY

Mrs. Jema Rajmohan, age 35, died at Newham General Hospital in London, England, on Thursday, August 20, 2015 at 3.05 am. The cause was kidney failure caused by terminal ovarian cancer.

Born on September 27, 1979 in Atchuvely, Sri Lanka. Till the age of 10, she lived in Chavakachcheri and attended Drieberg College, from then she grew up in Alwis town, Wattala, Sri Lanka, where she studied GCSEs and Alevels at Kingston International School, Wellawatte, and a fluent speaker in Sinhala, Tamil and English.

Before settling in London, UK in 1999. She took up studies in Information Technology and gained her professional qualifications. She worked in Sainsbury's and Whistle-stop as head cashier and later general manager at Gnanam telecom, East Ham.

Later becoming a homemaker after the birth of her son. She travelled the world, and her favourite pastimes included shopping, regular moviegoer, and driving her car.
After her illness, during her treatments abroad she gained certification in International Beauty Course in India. Jema was an intelligent, caring and a friendly personality who attracted many hearts. She was courageous during her fight against cancer and she always kept a beautiful smile.

We can only learn from the way she lived life to the fullest.

Survivors include her mother,
Eswary Kumararajah, husband,
Rajmohan, and son, Ashwan,

Elder brother, Mohan (Denmark), elder sister, Uma
(Denmark), elder sister, Rama (London),
elder brother, Ruban (Germany),
sister in laws, Rohini and Yalini,
brother in laws, Nathan and Kumar,
nieces, Nanthuja, Sahana, Sophia,
Abiramy and Aswiya, nephews,
Arun, Roshanth, and Siyan and granddaughter,
Anayah Nirukthi and son in law,

**Aliabbas.**



My mum looked after me very well, she was caring, kind and happy no matter what was in her way. Even though she was ill she had nothing to stop her from being independent. She has supported me in my education, health and well-being. She has been with me through all my struggles and helped me achieve the best. I could never forget her, she is the best mum I could have ever had.

Lots of Love,

**From Ashwan**

**Remembering our**
**Dear Aunt Jema as I called her Sithi,**



Your death was a shock to us for we thought your courage and strength will outlive any pain and suffering that your illness put you through, and for those that comforted us with words of sympathy that "we had taken great care of you", it was simply paying back all the effort that you had made with us before your illness, whether that was "accompanying me on school trip to the beach" or looking after me when I would return from school on the days that I stayed with you, you would organise birthdays for us, you would buy us dear gifts, you were our travel buddy wherever we went on holiday, now who would we do all those things with.

Only I and the close ones knew of your wish to live longer not for you but to see your son grow up as a young man. Nevertheless at your young age, who else would not have had the desire to live till old age.

Although we can no longer change the will of God, we can only live to miss you dearly every day, for we did not go a day without seeing your face. I have great sorrow in seeing that you will not be there in my momentous moments of my life to come, whether that is my wedding, which I know you had so dearly wanted to see me get married, my birthdays and so on.
After all you were merely not my aunt, but my older sister, a friend, and our happiness.

As a lady of great will, I know you lived by these words, "**Do** not fear death... only the unlived life. You don't have to live forever; You just have to live."

We will carry this sorrow for the rest of lives, by I know you will live with us in spirit and we will continue to take care of your precious son.

**Yours ever, Sahana**

## Sithi has always been a great influence in my life.

Even though she was my mum's younger sister and our aunt, I always thought of her as my older sister and a motherly figure who guided and supported me throughout life.

Her strong and charming personality always grabbed the attention of others. She always ensured she was listened to and was the life of the party. A very ambitious individual who would not hesitate to try any challenge that came her way, I know that is how she tried to beat the disease. Even to this day cancer never beat her, she just decided to give up (She wanted a break!).

A kind and gentle soul that never said no to anyone that approached her for help, in God's grace she never lacked any support during her adventure to beat cancer. Always God fearing, she travelled throughout India and Sri Lanka to many temples, churches and other religious sanctuaries.

From our travels as young ones to Cambodia to our recent venture to Sri Lanka, we always succeeded in our journey, but this time she decided to go for a long journey alone. Many fear death but Sithi never feared the life

beyond, she was only saddened by the fact that she would not live to see her son become a wonderful man. Do not worry Sithi, you are forever watching him and supporting Ashwan in this wonderful journey called life. Never liked to be called 'mami' by Abbas instead 'Jem Jem' I think you forever will be the diamond in our lives. A great joy you had watching us succeed in our lives and a shoulder to cry on for support. You were the wisest!

Your darling grand-daughter will miss you dearly. I still remember the great joy you had when she was born and the lovely times you spent together singing and dancing. I'll always remember to tell your tales, that is what they will be.

Your life will live in our memories, never forgotten and always will be a part of our lives. I hope our souls will meet in the next adventure (Aye Aye Captain!)
Your beloved niece and a fellow adventurer

**Nanthuja**

Three things that describe Jema Mami in my world are joyful, helpful and strong. She is the kind of person who would keep smiling through sad and happy times. That's how I know her, that's how I last saw her and that's what I will remember her for.

She used to be one of them who wanted me to look pretty in front of others. She used to be one of them who wanted to see a smile on others faces. Even though she is not here, her humour, her laugh and the memories with her will always be cherished and looked back at. The sorrow will be there, but she would have wanted us to be happy and keep smiling.

Here is a quote, which I want to dedicate to our loving Jema mami:

> "A Limb has fallen from the family tree that says grieve not for me. Remember the best times, the laughter, the song, the good life I lived while I was strong"
> *Author Unknown.*

**Abiramy**

## அண்ணாமார்
## மருமக்கள் துயர்

ஒவ்வொரு வருடமும் ஓடி ஓடி வருவாயே மாமியே!
வரும்போதெல்லாம் எனக்கும், தம்பிக்கும் ஆடைகள்
வாங்கித்தந்து அழகு பார்ப்பாயே மாமியே!
நாம் எடுக்கும் விழாக்கள் அனைத்திலும் மகிழ்வோடு
பங்களிப்பாயே மாமியே!
அஸ்வனுடன் எல்லா இடங்களுக்கும் சென்று விளையாடுவதை
பார்த்து உள்ளம் மகிழ்வாயே மாமியே!
உங்கள் இழப்பு வையம் உள்ளவரை நீங்காது!
என்றும் எங்கள் இதயத்தில் வாழ்வீர்!

**அஸ்வியா, சியான்.**

I can't believe that Ashwan won't have his mother anymore.
You were his only mother and he your only son.
The love you had for him can't be replaced by anything in this world.

I can't believe that we won't get to experience the love and warmth that you gave us anymore.
Even though we lived so far apart and didn't get to see each other so often, you still treated us like your own when we were together.
You were both an aunt and a friend to us.

I can't believe that we won't see you smile or hear you laugh again.
Your smile and laughter was like a bright light, which could never be turned off.
Even though your batteries of energy were empty, the light would never disappear from your mouth.

God took you away from us, but you still left us with the image of a person that we have a lot to learn from.

You taught us how to be a good parent and a good role model for the younger generation.
You taught us how to express one's love and always keep giving.
You taught us how to keep smiling and being strong no

matter what problems we may have.

I hope that Ashwan will step in your shoes and become a man with the qualities that you tried to give him.
I hope that we nephews and nieces will get our aunt's strength to overcome whatever problem we may face in our lives.
I hope that people realize that one of the strongest and most independent women we know isn't with us anymore.

Sithi, you have always been one of my heroes and we will always love you.
You will always be in our hearts and I hope you will always watch over us.
I will strive to live my life with what you have taught me and make you proud.

**May you rest in peace**
**our one and only**
**Jema sithi**

Did not see your face often

Did not see your smile often

Did not know everything about your pain

Did not feel all your tears

All I knew was that my aunt did not deserve this

All I thought was that this world lost a beautiful heart

A heart which is remembered by endless love

**Sophia**

For the few years that I have known Jema, She has never shown any signs of weakness to the condition that she had. My fond memories of Jema were that she was unbelievably strong, brave, and resilient young woman. She will always be remembered for these good qualities. I always remembered Jema as being a fun loving individual. I remember on one occasion I asked her how she always remained so positive considering her circumstances, she said, "If I was to give up and say goodbye today, then who would be there for Ashwan and our family". This statement showed her dedication to her loved ones.

She showed us all that even if the earth crumbled tomorrow, you should stand against all the troubles that life throws at you.

Jema loved to eat out at her favourite restaurants, go for some shopping even if she was very poorly. Once again, we could all learn from her bright outlook on life.

I pray that she has found her place in heaven and is looking above us (Ameen)

Heaven has found another Angel.

**Aliabbas and the Thaver family**

# நன்றி நவிலல்

பாசத்தின் உறைவிடமாய் ஒளிவீசிய எங்கள் தெய்வம் **அமரர் திருமதி ஜெமா ராஜ்மோகன்** அவர்களின் மறைவு கேட்டு நேரில் வருகை தந்தும் மலர் வளையங்கள், மாலைகள் சமர்ப்பித்தும் அஞ்சலி செலுத்தியோருக்கும் உள்நாடு வெளிநாடுகளிலிருந்து அனுதாப அட்டைகள் தொலைபேசி என்பவற்றின் மூலம் ஆறுதல் கூறியும் எமது துக்கத்தில் பங்கு கொண்ட அன்பு உள்ளங்களுக்கும் இறுதி ஊர்வலத்தில் பங்கு கொண்டவர்களுக்கும் 31ம் நாள் அந்தியேட்டி, சபிண்டிகரண நிகழ்வுகளில் கலந்து சிறப்பித்தவர்களுக்கும், நிகழ்வில் கலந்து கொண்ட அனைவருக்கும் எமது இதயம் கனிந்த நன்றிகள்.

**குடும்பத்தினர்.**

# *Thank You*

We would like to sincerely thank all of our relatives and friends who went out of their way to help us in numerous ways and also sharing in our grief and sorrow over the last couple of months.

We would like to express our appreciation for all the messages of condolence and floral tributes we have received, and the many comforting words.

Family.

